மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 12–01–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (12–01–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

(ஆ) விதி 55 (6) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (12–1–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 55 (6)–ஐத் தளர்த்தி, நாளை (12–01–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

109. (i) இம்மாநிலத்தில் யாதொரு தயாரிப்புத் தொழில் பிரிவில் பயன்படுத்துவதற்காக அட்டவணையிடப்பட்ட பொருட்களை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் அவர் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் மற்றும் (ii) வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள சென்னை ஏற்றுமதிப் பொருள் தயாரிப்பு மண்டலத்திலும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் அமைந்துள்ள 100 சதவீத ஏற்றுமதி நோக்கிலான பிரிவுகளிலும் மற்றும் ஏனைய பிரிவுகளிலும் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்துவதற்காக விற்பனை செய்யப்படும் அட்டவணையிடப்பட்ட பொருட்களுக்காக, இறக்குமதியாளரும், தயாரிப்பாளரும் குறிப்பிடப்பட்ட படிவங்களில் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகரான இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் (சி2) துறையின், 21–10–2004 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS